மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 18 ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவிற்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :

"வேளாண்மைத் துறையின் 1—3—75 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி., சட்ட மன்ற மேலவையினால், தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்ட சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 31/1959), 8வது பிரிவைச் சேர்ந்த (2) உட் பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும்;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;

எனவே, மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது உட்பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினை ஒட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்ற மேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை ;

"வேளாண்மைத் துறையின் 1—3—1975 நாளிட்ட 305 ஆம் எண் அரசாணையில் மாற்றியமைக்கப்பட்ட தமிழ் நாடு நில மேம்பாட்டுக் குழுவின் உறுப்பினராக திரு. கோ. சி. மணி, எம்.எல்.சி. சட்டமன்ற மேலவையினால் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959), 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும் ;

மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினரின் பதவிக்கால அளவு மேற்சொன்ன பிரிவைச் சேர்ந்த (5) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ், 28—2—1978 அன்று முடிவடைந்துள்ளதாலும் ;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

எனவே மாண்புமிகு மேலவைத் தலைவர் முடிவு செய்யும் நாளன்று தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு, நில மேம்பாட்டுத் திட்டச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8 வது உட்பிரிவிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியினை யொட்டி, மேற்சொன்ன குழுவின் உறுப்பினராக இருக்க, சட்ட மன்றமேலவையின் உறுப்பினர் ஒருவரை இம்மன்றம் தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ் நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 21—3—78, செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 21—3—1978, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 22—3—1978, புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின், 27—3—1978, திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கும் பிற்பகல் 1-30 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(3) அரசியலமைப்பு (நாற்பத்து மூன்றாவது திருத்தச் சட்டம்) என்று மாற்றப் பெற்ற குறுந்தலைப்பினைக் கொண்ட 1977 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (நாற்பத்து நான்காவது திருத்தச்) சட்ட முன்வடிவு.

(முற்பகல் 10-50)

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Chairman, Sir, I beg to move:

"That this House ratifies the amendments to the Constitution of India falling within the purview of the proviso to clause (2) of article 368 thereof, proposed to be made by the Constitution (Forty-fourth Amendment) Bill, 1977, as passed by the two Houess of Parliament and the short title of which has beer changel into 'The Constitution (Forty-third Amendment) Act, 1977'."